
For Private Circulation Only

மலர் 4, Special Issue ஆகஸ்ட் 2011

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

India ECHOES ONE WORLD ONE HUMANITY

# நினைவு கொள்ள ஒரு பிறந்த நாள்





வணக்கத்திற்குரிய மாஸ்டரின் 85வது பிறந்த நாள் விழா, இந்தியாவில் உள்ள திருப்பூர் வைர விழா பூங்காவில், 2011, ஜூலை 23 முதல் 25 வரை கொண்டாடப்பட்டது. அன்புக்குரிய மாஸ்டருடன் இருந்து, விழாவில் பங்கேற்கும் ஒரு மகிழ்ச்சியான தருணமாக அது இருந்தது. மாஸ்டர் ஜூலை 20ம் தேதி திருப்பூர் வந்தடைந்தார். அவரது கார் விழாத்திடலில் நுழைந்தபோது, அப்யாசிகள் தங்கள் அன்புகுரியவரைக் கணநேரம் காண்பதற்கு, அமைதியாகக் காத்திருந்தனர். இளைய அப்யாசிகள், அவரை வரவேற்கும் பொருட்டு, ஒரு பாடல் பாடினர். கார் நின்றவுடன் பாடலைக் கேட்ட மாஸ்டர், அதன்பின் தன் காட்டேஜுக்குச் சென்றார். அவர் வந்து சேர்ந்தவுடன், அங்குள்ள சூழல் சட்டென்று மாறியதை உணர முடிந்தது.

மாஸ்டர் விழாத்திடலுக்கு வந்து சேர்ந்தபோது, அநேகமாக அனைத்து வசதிகளும் தயாராகி, கடைசிநிலை ஏற்பாடுகள் மட்டுமே பூர்த்தியாகாமல் இருந்தன. அவர் வந்தவுடன், தன்னார்வத்தொண்டர்கள் உடனடியாக அதிக அளவில் பங்கேற்று, ஒவ்வொருவரும் தங்கள் வேலைகளை ஏற்றவுடன், பல்வேறு பணிகளும் சீராக இயங்கத்தொடங்கின. மாஸ்டர், 'ருசிகபே' யால் நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலையைத் திறந்து வைத்தபின், வளாகத்தில் நடைபெறும் ஏற்பாடுகளைக் கவனிக்கச்சென்றார்.

## பிரம்மாண்டமான முன்னேற்பாடுகள்

200,000 சதுர அடி அளவிலான ஒரு மிகப் பெரிய தியான மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. சுமார் 100 தன்னார்வத்தொண்டர்களின் உதவியுடன், அதனை அலங்கரிக்க 1500 கிலோ எடையுள்ள மலர்கள் பயன்படுத்தப்பட்டன. தியான மண்டபத்தின் மேடை ஏற்பாடுகள், தண்ணீர் விநியோகம், சுத்திகரிப்பு, அலங்கரித்தல், ஒளி --ஒலி அமைப்பு, பாதுகாப்பு, கோல்டன் புத்தகம் போன்ற பல்வேறு பணிகளில், சுமார் 400 தன்னார்வத்தொண்டர்கள் ஈடுபட்டிருந்தனர். இது போன்ற மிகப் பெரிய இயக்கம், நம் மாஸ்டரின் தெய்வீக வழிகாட்டுதலினால் மட்டுமே, மிக அதிகமான ஒத்திசைவுடனும், ஒத்துழைப்புடனும் நிகழ முடியும். மாஸ்டர், ஜூலை 22ம் தேதி, காலை சத்சங்கத்துடன் தியான மண்டபத்தைத் திறந்து வைத்தார். மேலும், விழாவின் அனைத்து நாட்களிலும் காலை சத்சங்கத்தை அவரே நடத்தினார்.










புகைப்படக் காட்சியகமும், சகஜ மார்க்க இளைஞர் அணியின் பல்வேறு செயல்பாடுகள் காட்சிக்கு வைக்கப்பட்டு, விளக்கங்கள் அளிக்கப்பட்ட "இளைஞர் விழிப்புணர்வு சாவடி"(Youth Awareness Booth) யும்,பெரிய அளவில் கவரப்பட்டன. அனைவரையும் கவர்ந்த மற்றுமொரு இடம், குழந்தைகள் மையம் ஆகும். மிகப் பெரிய அளவிலான ஒரு கூடாரத்தில், அனைத்து வயதையும் சேர்ந்த குழந்தைகள் கூடி, பல்வேறு கலை, மற்றும் கைவேலைகளில் ஈடுபட்டனர். தனிச்சிறப்புடன் எழுதப்பட்டு, மும்பையில் பதிவு செய்யப்பட்ட ஒரு பாடல், விழாவின் போது சுமார் 2000 குழந்தைகளால் ஒத்திகை பார்க்கப்பட்டு, பின்பு மாஸ்டர் காண்பதற்காக, அவருக்கு நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த குழந்தைகள், இந்த குழு இசையை, ஒரே குரலில் பாடியது, திகைப்பூட்டுவதாக இருந்தது.



## எண்ணிக்கையிலும் வசதியிலும் ஒரு புதிய உயர்வு

விழாவில் அப்யாசிகளின் பங்கேற்பு மிகப் பெரிய அளவில் இருந்தது. விழாத்திடலில், குழந்தைகளையும் சேர்த்து, சுமார் 48,000 அப்யாசிகள் இருந்தனர். இது இன்றைய தேதி வரையிலான மிகப் பெரிய கூட்டமாகும். அப்யாசிகள் தங்க உதவும் வகையில், சுமார் 200 கூடாரங்கள் அமைக்கப்பட்டன. இதைத்தவிர, சிறிதளவு பணம் கட்டிப் பெறும் சிறப்பு தங்கும் இடங்களான 'ஆராம் தாம்' வசதிகளும் இருந்தன.



இது போன்ற மிகப் பெரிய அளவிலான அப்யாசிகளின் கூட்டத்தில், பல்வேறு பகுதிகளையும் இயக்க, எவ்வளவு தன்னார்வத் தொண்டர்களின் முயற்சி தேவை என்பதை கற்பனை செய்து பார்க்கவேண்டும். பேருந்துகள், பல்வேறு இடங்களிலிருந்தும் விழாத்திடலுக்கு வந்து சேர்ந்ததால், போக்குவரத்து, தங்குமிடம், மற்றும் பதிவு செய்யும் குழுக்களிடையே, ஒருங்கிணைவு மிகவும் தேவையாக இருந்தது. தொண்டர்குழு, மிக எளிமையான முறையில் சிறப்பாகப் பணியாற்றி, அப்யாசிகள் சீராக இயங்க உதவியது. நடமாடும் உணவு மற்றும் தண்ணீர் விநியோகக் குழு, தன்னார்வத்தொண்டர்கள் எங்கெல்லாம் பணியாற்றுகிறார்களோ, அங்கெல்லாம் அவர்களுக்குச் சரியான நேரத்தில் உணவு, தண்ணீர் வழங்க, இரவு பகலாகப் பணியாற்றியது.




















மிகவும் பெரியதான, வசதியான புத்தக விற்பனைக் கூடம் ஒன்று இருந்தது. அனைத்து மொழிகளிலும் புத்தகங்கள், மற்றும் சமீபத்திய வெளியீடுகள் ஆகியவை விற்பனைக்கு இருந்தன.

சமையலறையில், சுமார் 100 தன்னார்வத்தொண்டர்கள் நின்று கொண்டு, சப்பாத்திகள் செய்தது, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. சமையலறையில், அப்யாசிகளுக்கு, காலை, நண்பகல் உணவைச் சேர்த்து BRUNCH ஆகவும், மற்றும் தேனீர், சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன.

ஒரு ஆம்புலன்சுடன் கூடிய, நன்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மருத்துவ மையமும், மற்றும் இதர அவசர சிகிச்சைகளுக்கான சேவைகளும் தயாராக இருந்தன. குடிநீர் தேவைகளுக்காக, மிகப்பெரிய RO plant( நீர் சுத்திகரிக்கும் இயந்திரம்) ஒன்று, ஒரு மணி நேரத்திற்கு 10,000 லிட்டர்கள் நீரை வழங்கியது. கழிவறைகளைச் சுத்தம் செய்ய, மிகச் சிறப்பாகப் பணியாற்றும் ஒரு தொண்டர்குழு, நியமிக்கப்பட்டு இருந்தது. இவைகளும், மற்றும் சமையலறை, சிற்றுண்டிச்சாலை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சுகாதார முன்னெச்சரிக்கைகளும், மருத்துவ மையத்தில் மிகக் குறைந்த அளவிலான நோயாளிகளே இருக்க உதவின.

## ஒரு புதிய ஒழுங்கு முறையின் துவக்கம்

ஜுலை 23ம் தேதி, காலை சத்சங்கத்திற்குப்பின், விழாக்கமிட்டித்தலைவர், சகோ. ஹர்ஷவர்தன் குப்தா வரவேற்புரை வழங்கினார். திருப்பூரில் விழா நடத்தத் தீர்மானித்ததற்காக, மாஸ்டருக்கு நன்றி கூறினார். நாடெங்கிலும் இருந்து வந்து, ஆயத்தப்பணிகளில் பங்கேற்ற எண்ணற்ற தன்னார்வத்தொண்டர்களுக்குத் தன் நன்றியைத் தெரிவித்தார். மாஸ்டர் தன்னிடம் உள்ள அனைத்தையும், சிட்டிங்கின் போது, பிராணஹுதி வடிவத்தில் நமக்குப் பொழிந்து விடுவதால், அவர், தம் காட்டேஜில் இருக்கும் சமயம், அவரைத் தொந்திரவு செய்வதை, அப்யாசிகளாகிய நாம் தவிர்க்க வேண்டும் என்னும் விஷயத்தை சகோ. குப்தா வலியுறுத்தினார்.

இந்த பண்டாராவிற்கு மாஸ்டர் அளித்த அறிவுரையான, 'அன்பில் ஒழுக்கம்' என்பதில் இருந்து எடுத்துக்கொண்ட



For Private Circulation Only

மலர் 4, Special Issue ஆகஸ்ட் 2011

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

எக்கோஸ் இந்தியா செய்திமடல்









குறிப்பின்படி, மாஸ்டருக்கு, ஓய்வு, மன அழுத்தங்களிலிருந்து விடுதலை ஆகியவற்றின் தேவையை மதிக்கும்படி, அனைத்து அப்யாசிகளுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அப்யாசிகளிடமிருந்து வந்த, அதற்கான மறுமொழி, அதிசயிக்கும் வண்ணம் இருந்தது. மாஸ்டருக்கு, அவர் பணிகளைச் செய்யவும், சத்சங்கங்களுக்கு நடுவே ஓய்வெடுத்துக்கொள்ளவும், தேவையான இடைவெளி கிடைத்தது. காலை

11.30 மணிக்கு, விழாவின் கருப்பொருளான 'அன்பில் ஒழுக்கம்' என்பது பற்றிய நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. சகோ. சக்ரபாணி, ஊக்கமளிக்கும் விதத்தில், முதலில் ஆங்கிலத்திலும், பின்பு தமிழிலும் உரையாற்றினார். எவ்வாறு ஒரு கப்பல் கடலில் சிலகாலம் இருக்கும் பொழுது, அடியில் அது சேர்த்துக்கொள்ளும் சில சிப்பிவகைகள் அதன் வேகத்தைக் குறைக்கும் என்றும், எனவே அக்கப்பல் அவ்வப்போது, செப்பனிடப்பட்டு சுத்திகரிக்கப்படவேண்டும் என்றும் அவர் ஒப்பிட்டுப் பேசினார். அதேபோல், அப்யாசிகளாகிய நாம் வருடம் முழுவதும் கடினத்தன்மையை சேகரிக்கிறோம். இந்த விழாக் காலத்தில் தான் மாஸ்டர் அப்யாசிகளைச் சுத்திகரிப்பு செய்து, அவரவர்களுக்குரிய இடங்களுக்கு திரும்பவும் அனுப்புகிறார். 23 தேதி மாலை, பல்வேறு மையங்களிருந்து வந்த அப்யாசிகள், பாட்டு, நடனம் போன்ற பலவகையான நிகழ்ச்சிகளை அளித்தனர்.

## பிறந்தநாள்


ஜூலை 24ம் தேதி காலையில், தியான மண்டபத்திற்கு வருவதற்கு முன்பாக, விழாத்திடலுக்குத் தேவையான தண்ணீரின் ஆதார இடமான ஏரி (சரோவர்)க்குச் சென்றார். ஏரி முழுவதும் நிரம்பி இருந்ததைக் கண்ட அவர் வேடிக்கையாக, "இந்த நீர் போதுமா அல்லது நமக்கு மழை தேவைப்படுமா?" என்று கேட்டார். பிறந்த நாள் பாடலை வயலினில் இசைக்க, அதைப் பின்தொடர்ந்து அனைத்து அப்யாசிகளும் பாட, மாஸ்டர் தியான மண்டபத்திற்குள் நுழைந்தார். மண்டபம் முழுவதும் அப்யாசிகள் நிறைந்து, மேலும் நிரம்பி வழிந்ததை அவர் கண்டார். "அந்த ஏரியைப் போலவே இந்த மண்டபமும் நிறைந்து இருக்கிறது!" என்று அவர் கூறினார். விழாவின் மூன்று நாட்களிலும், மாஸ்டர் 28 திருமணங்களை நடத்தி ஆசி கூறினார். ஜூலை 27 அன்று, சகோதரி ரஞ்சனா மெஹ்தா மற்றும் சகோ. குர்ப்ரீத் ஆகியோர் பாடிய இனிமையான பஜன்கள், அனைவரது இதயங்களையும் தொட்டு, கண்ணீரை வரவழைத்தன. அதன்பின் மாஸ்டர் உரையாற்றினார்.

ஜூலை 27 மாலை சத்சங்கத்தை, சகோ. P.R.கிருஷ்ணா நடத்தினார். சத்சங்கம் நடந்து கொண்டிருந்தபோது, மேகங்கள் ஒன்று திரண்டு கர்ஜித்தன. சத்சங்கம் முடிந்தவுடன் மழை கொட்டியது. சத்சங்கத்திற்குப்பின், சகோதரி ஜெயந்திகுமரேஷ் அவர்களின் வீணை இசை நடைபெற்றது. நிகழ்ச்சியை மாஸ்டர், தன் காட்டேஜிலிருந்து, CCTV வசதி மூலம் பார்த்தார். அது, 2மணி நேரத்திற்கு பார்வையாளர்களைக் கவர்ந்த, அற்புதமான நிகழ்ச்சியாக இருந்தது.

அப்யாசிகளைத் தனிப்பட்டமுறையில் சந்திப்பது, பூஜ்ய மாஸ்டருக்கு கடினமானதொன்றாகும் என்பதைப்புரிந்து கொள்ள முடியும். இருப்பினும் மாஸ்டர் சமயமும்,












முயற்சியும் எடுத்து, பல்வேறு அப்யாசி குழுக்களுடன் பல கூட்டங்களை நடத்தினார். அவர், ஆப்பிரிக்கா, நேப்பால், ஸ்ரீலங்கா, அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய இடங்களில் இருந்து வந்த அப்யாசிகளைச் சந்தித்தார். அக்கூட்டங்களுள் ஒன்றில், அப்யாசிகள் முதலில் தங்கள் மீதும், மற்றவர்கள் மீதும் பணியாற்றவேண்டியதன் அவசியத்தையும், அதன்பின்னரே அவர்கள் கூட்டங்கள் மேற்கொள்ளவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார். அப்பொழுதுதான் கூட்டங்கள் அர்த்தமுள்ளவைகளாக இருக்கும் என்று கூறிய அவர், அவர்களைப் பணியாற்றவும், அதன்பின் அடுத்த முறை சந்திக்கவும் ஊக்குவித்தார்.



## ஒரு பொருத்தமான கடைசி அங்கம்

பூஜ்ய மாஸ்டர், ஜூலை 25ம் தேதி, விழாவின் முடிவு சத்சங்கத்தை நடத்தினார். அதைத் தொடர்ந்து, மாஸ்டரின் புகழ் பாடும் தெய்வீகக் கவிதைகளை, சகோதரி நிஹாரிகா ஹிந்தியில் வழங்கினார். அவை இதயபூர்வமாக இருந்தன. கவிதை கூறியபோது, அதிலிருந்து வெளிப்பட்ட அன்பை, மண்டபத்தில் இருந்த ஒவ்வொரு அப்யாசியாலும் உணர முடிந்தது. முடிவுரை ஆற்றிய சகோ. P.R. கிருஷ்ணா, விழாவின் கருத்தான, ’அன்பில் ஒழுக்கம்’ என்பதைப் பற்றிக் கூறினார். அப்யாசிகளாகிய நாம், விழா முழுவதும் இக்கருத்தைக் கடைப்பிடித்ததாகவும், நமது நடத்தை நம் மாஸ்டரை மகிழ்வுறச் செய்ததால், நாமும் மகிழ்ச்சி அடையலாம் என்றும் கூறினார். நம் வாழ்வில் உள்ள முக்கியமான பிரச்சனைகளை, தவறான அபிப்பிராயம், எதிர்பார்ப்பு மற்றும் மதிப்பீடு செய்வது என்று மூன்று வகைகளாகப் பிரித்து, இந்த மூன்று விஷயங்களுக்கும் காரணம் நம் அகம்பாவமே என்று கூறினார். தான் இன்று இருக்கும் நிலையை அடைய உதவி புரிந்த ஒரே விஷயம் கீழ்ப்படிதல் தான் என்று மாஸ்டர் கூறியுள்ளதை அவர் மேற்கோள் காட்டினார். இந்த உரையுடன் விழா முடிவடைந்தது. ஆனால், அது நம் இதயங்களில் ஏற்படுத்திய பொங்கும் உணர்வுகள் என்றென்றும் நிலைத்திருக்கும்.







மலர் 4, Special Issue ஆகஸ்ட் 2011

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## மாஸ்டரின் உரையின் சாராம்சம் - ஜுலை 24



----"அவர் (குர்ப்ரீத்) இப்பொழுது பாடியதைப் போல, குருவின் அருளுடன், ஒவ்வொரு நொடியும் ஒரு புதிய காலை ஆகும். நம் காலைப் பொழுதுகள், புதிய காலையாகவாவது உள்ளனவா? அல்லது ஒவ்வொரு காலையிலும் நாம் வருந்துகிறோமா? நான் ஏன் எழுகிறேன்? இன்று நான் என்ன செய்யப் போகிறேன்? நான் பல வருடங்களாக, இன்னும் கூறப்போனால், பல பிறவிகளாக இருந்து வரும் பிரச்சனைகளையே தீர்க்கவில்லையே, இந்த காலை எப்படி வேறு விதமாக இருக்கப்போகிறது? மறுபடியும் நான் அமர்ந்து, வருந்தி, 'நீ என்னை ஏன் இங்கே இவ்வாறு வைத்திருக்கிறாய்?' என்று கடவுளிடம் அழுது முறையிட வேண்டும்.

---இங்கே, நம்மில் யார் ஒருவர், தனக்காக இல்லாமல், வேறு யாருக்காவது எதை வேண்டுமானாலும் செய்கிறார்? இன்னமும், நாம் வீடுகளைப் பெருக்கிவிட்டு, குப்பைகளைத் தெருவில் போடவில்லையா? நம் குழந்தைகள் மலம் கழிக்க, இன்னமும் அவர்களை ஓரப்பாதைகளில் அமர்த்தவில்லையா? இன்னமும், சிகரெட்டுகளை தெருக்களில் எறியவில்லையா? குப்பைத் தாள்களைத் தெருக்களில் போடவில்லையா? தெருக்களில் எச்சில் துப்புவது இல்லையா? ஆனால் பசுமையான சுற்றுச் சூழலைப் பற்றி நிறையப் பேசுகிறோம். மரங்களை நாம் வெட்டுவதில்லையா? ஆறுகளை நாம் மாசுபடுத்துவது இல்லையா? பழமையான வேதங்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும்; வேதங்களின் சில பகுதிகளில், ஒரு நல்ல மனிதன் சுற்றுப்புறச் சூழலைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும், அவன் மரங்களை வெட்டக் கூடாது, மரங்களைப் வணங்க வேண்டும் என்றும் கூறி உள்ளார்கள். ஏனென்றால், மரங்கள் இல்லையென்றால் பிராணவாயு இருக்காது. காற்று மண்டலச் சுத்திகரிப்பும் இருக்காது. மரங்கள் விறகுக்காக ஏற்பட்டவை அல்ல. நாம் ஒவ்வொரு முறையும் சுவாசிக்கும் போது வெளிவிடும் கரியமிலவாயுவால்( கார்பன்-டை- ஆக்சைடு) அசுத்தமாகும் காற்றுமண்டலத்தைச் சுத்தம் செய்யவே மரங்கள் உள்ளன. நாம் தான் மாசுபடுத்துபவர்கள்; இருந்தும் நாம், மனிதன் தான் பரிணாம வளர்ச்சியின் சிகரம் (Shikar) என்று பெரிதாகப் பேசுகிறோம். அவன் பரிணாம வளர்ச்சியினால் வேட்டையாடப் பட்டவனாக (Shikaar) இருக்கலாம். ஆனால் சிகரமாக அல்ல.


----நான் குறிப்பிட்டுக்கூறி, உங்கள் கவனத்தைத் திருப்பவிரும்புவது என்னவென்றால், உயர்ந்த நாடாகக் கருதப்படுவது, கங்கை பாயும் நாடு, ஜிஸ் தேஷ் மே கங்கா பெஹ்தி ஹை, வேதங்கள் வந்த நாடு, என்று பலவாறு கூறப்படும் நாட்டின் தற்போதைய நிலைமைக்கு, நாம் ஒவ்வொருவரும் பொறுப்பாகிறோம். நாம் மிக அதிகமாக உரிமை கோருகிறோம். நம் சார்பாக, அந்த கட்டளைகளைப் பின்பற்றவோ, மனித வாழ்வின் அந்த தேவைகளுக்காகவோ, எதையாவது செய்து, அந்தப் பாரம்பரியத்தை பாதுகாக்கவாவது செய்கிறோமா? இரக்கம், கருணை, அன்பு, பங்கிட்டுக்கொள்ளல், சுய நன்மைக்காக மற்றவர்களைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருத்தல், உங்களுக்காக மட்டும் வேலை செய்யாமல், மற்றவர்களுக்காகவும் வேலை செய்தல். உண்மையில், 'உன்னை மற' என்று தான் ஆன்மீகம் கூறுகிறது. நீங்கள் மற்றவர்களுக்கு என்ன செய்கிறீர்களோ, முடிவில் அது உங்களிடமே திரும்பி வருகிறது. அந்த நேரிடக்கூடிய நிகழ்ச்சி அடுத்த யுகம் என்று பொருள் அல்ல. ஏனென்றால், எல்லா தொன்மையான விஞ்ஞானமும், அறிவு கடந்த மறைபொருளும், மேலும் நீங்கள் குறிப்பிடும் அனைத்தும், நீங்கள் என்ன செய்கிறீர்களோ, நீங்கள் என்ன சிந்திக்கிறீர்களோ, அது, இப்பேரண்டத்தைச் சுற்றிப் போய் விட்டு, திரும்பவும் உங்களிடமே வருகிறது என்று கூறுகின்றன. ஆனால் நாம் என்ன செய்கிறோம்? எடுத்துக் கொள்கிறோம், எடுத்துக் கொள்கிறோம், எடுத்துக்கொள்கிறோம்.



ஒரு பழமொழி உண்டு, உங்களுக்குத் தெரியுமா? ஒரு கல் கல்லாகத்தான் இருக்கும். நீங்கள் அதை உதைக்கலாம், நீங்கள் அதைத் தூக்கி எறியலாம், நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ அதைச் செய்யலாம். ஆனால் நீங்கள் அதைக் கோவிலில் வைக்கும்போது, நீங்கள் அதன் வேலைக்காரன். உங்கள் கற்களை எங்கு வைக்கிறீர்கள் என்பதிலும், உங்கள் பணத்தை எங்கு வைக்கிறீர்கள் என்பதிலும், உங்கள் பக்தியை எங்கு வைக்கிறீர்கள் என்பதிலும் எச்சரிக்கையுடன் இருங்கள். எச்சரிகையுடன் இருங்கள். ஏனென்றால், இன்றைய உலகம் மிகவும் மோசமானது. நாளைய உலகம், இன்றிலிருந்து ஐந்து வருடங்களுக்குப் பிறகு, அது எவ்வாறு இருக்கப் போகிறது? உங்கள் குழந்தைகள் ஐந்து வருடங்கள் பெரியவர்களாகி விடுவார்கள். உங்கள் பேரக்குழந்தைகள் ஐந்து வருடங்கள் வளர்ந்து விடுவார்கள். குழந்தைகள் இளைஞர்களாகிவிடுவர். நீங்கள் இப்போது வயோதிகத்தை எதிர்நோக்கி இருக்கிறீர்கள். உலகத்தை, அது இன்று எப்படி இருக்கிறதோ அதை, நான் தான் உருவாக்கினேன் என்று கூற, உங்களுக்குத் தைரியமோ, உண்மையோ இருக்க முடியாது. என் மகனே, நீயாவது அதைச் செய்யாமல் இரு. நாம் அவ்வாறு செய்ய மாட்டோம். எனவே, இங்கு இருக்கும் நம்மில் பெரும்பான்மையானோர் மீது, ஆன்மீகமானது ஒரு பயனற்ற விஷயம் ஆகும். நாம் விடுமுறைக்காக வருகிறோம், இசையை அனுபவித்து மகிழ்கிறோம், நல்ல உணவை உண்டு மகிழ்கிறோம். நம்மில் எத்தனை பேர் தீவிரமாக ஆன்மீகத்தை விரும்புகிறோம்?

----உண்மை, ஒரு கசப்பான மருந்தாகும். அதை நாம் சர்க்கரையில் தோய்க்க முடியாது. ஏனென்றால், அதில் அர்த்தமே இல்லை. உங்கள் உள்ளேயிருந்து மட்டுமே வரப்போகும் மிகக் கசப்பான உண்மையை எதிர்நோக்க உங்களை தயார் படுத்திக் கொள்ளுங்கள். மாலையில் சுத்திகரிப்பைச் செய்யும்போது, உங்களை நீங்களே பார்த்துக்கொள்கிறீர்களா? நீங்கள் படுக்கைக்கு சென்று, இரவு நேரப் பிரார்த்தனையைச் செய்யும்போது, 'இதே தவறுகளைத் திரும்பவும் செய்யாமல் இருக்க உறுதி கொள்ளுங்கள்' என்று பாபுஜி கூறியதைப் பற்றி சிந்திக்கிறீர்களா? நாம் அதைச் செய்கிறோமா? அல்லது, 'ஓ மாஸ்டர்! மனித வாழ்வின் உண்மையான குறிகோள்---------' என்று வெறுமனே கூறுகிறோமா? இது சிரிக்க வேண்டிய விஷயம் அல்ல. அப்படித் தோன்றினாலும், உண்மையில் அது முக்கியமான ஒன்றாகும்.

----- இயற்கையின் சக்திகள் விழித்தெழும்போது, பறவைகளும், மிருகங்களும் மற்றும் எறும்புகளும் அதை அறிந்து கொள்கின்றன. ஆனால் நாம் அறிந்து கொள்வதில்லை. நாம் நில நடுக்கத்தைப் பதிவு செய்யும் கருவியை நம்புகிறோம். தொலைக்காட்சியில் வரும் செய்திகளை நம்புகிறோம். அவற்றில் பெரும்பான்மையானவை பொய்களே. இங்கே, (இதயம்) இங்கே இருக்கும், நீங்கள் பார்க்காத ஒன்று எது? அது உங்களுக்கு ஒரு பேரிழப்பைப் பற்றிய எச்சரிக்கையைக் கொடுக்கிறதா? எப்பொழுதெல்லாம் உங்களுக்கு பயம் உண்டாகிறதோ, எப்பொழுதெல்லாம் நீங்கள் பாதை மாறிப் போகிறீர்களோ, அப்பொழுதெல்லாம் இங்கே பாருங்கள். பாபுஜி மகராஜ், 'இதை (மனம்) நம்பாதீர்கள். அது ஒரு சிந்திக்கும் பொருள் மட்டுமே. அது உங்களுக்கு தகவலைத்தான் தரும். எது சரி அல்லது தவறு என்று, அதனால் உங்களுக்குக் கூற முடியாது. உங்களுக்கு சந்தேகம் வரும்போது இதயத்திடம் கேளுங்கள் ' என்று கூறினார். இன்று, உங்கள் அனைவருக்கும் அவரது ஆசிகள் கிட்ட, நான் பிரார்த்திக்கிறேன்!"

# புதிய வெளியீடுகள்



மாஸ்டர் பல புத்தகங்களையும், CDக்களையும் வெளியிட்டார்.

டேல்ஸ் ஆஃப் ஒண்டர் 1
தமிழ், தெலுங்கு, ஹிந்தி


கம்ப்ளீட் ஒர்க்ஸ் ஆஃப் ராம்சந்த்ரா வால்யூம்1- ஹிந்தி

ஒய் ஸ்பிரிசுவாலிடி
ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு, தமிழ், குஜராத்தி, கன்னடம், மராத்தி, நேப்பாலி, ஜெர்மன், இத்தாலியன், போர்ச்சுகீஸ், ஸ்பானிஷ்

டவுன் மெமொரி லேன்
இரண்டாம் பதிப்பு




அண்டர்ஸ்டாண்டிங் ஸ்பிரிசுவாலிடி
(5 DVDக்களின் தொகுதி)




ப்ரிபெக்ட்ஸ் DVDக்களின் தொகுதி வால்யூம் 2
(கார்ப்பசில் இல்லை)





இன்னர் ரிஃப்லெக்ஷன்ஸ் - வால்யூம் 1
டாக்ஸ் ஃபார் ரிஃப்லெக்ஷன்ஸ் ஆஃப்டர் சத்சங்




குரு அண்ட த கோல்
தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி, குஜராத்தி





மதமும் ஆன்மீகமும்
தமிழ்





யூத் வால்யூம்- 1
இத்தாலியன்





ரியாலிடி அட் டாண்
மலையாளம்





ஹார்ட் ஸ்பீக் 2009
ஸ்பானிஷ்




ஹார்ட் ஸ்பீக் 2007
ஹிந்தி




ஹார்ட் ஸ்பீக் 2002
வால்யூம்1
ஆங்கிலம்




டேல்ஸ் ஆஃப் ஒண்டர் 2
ஆங்கிலம்